புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தொல்காப்பியக் களவியல் நோக்கில் சங்கத்தலைவியின் மாண்புகள்

**த.திலகவதி,**
முனைவபட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் -641043.

**முனைவர்.மு.கவிதா,**
**உதவிப்பேராசிரியர்,** தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் -641043.

**ஆய்வுச்சுருக்கம்**

அக இலக்கியங்களில் தலைவியின் பங்கு மிக நுட்பமானதாகும். தலைவியின் வெளிப்பாடுகள் உரையாடல் திறன், ஒழுக்கமாண்புகள் அனைத்தும் தமிழ் மண்ணுக்கே உரியனவாக இருக்கின்றன. தலைவனுக்கு அடுத்து முக்கியமாக விளங்குபவள் தலைவி ஆவாள். அகப்பொருள் நூல்களில் காணப்பெறும் தலைவி அழகும், அறிவும் சிறந்தவளாக காணப்படுகின்றாள். காதல் வாழ்க்கையைக் கூறும் அகத்திணையின் இரு பகுதிகளாகக் களவும், கற்பும் அமையும். ஒருவனும் ஒருத்தியும் தமக்குள்ளே கண்டு காதல் கொள்ளும் ஒழுக்கம் களவு என்று வழங்கப்படும். அகப்பொருள் பற்றிய இலக்கியங்களில் களவு தான் மிகுதியாகப் பேசப்பட்டுள்ளது. களவானது, பிறர் நன்கு அறியாதபடி மறைவாக நிகழும் ஒழுக்கமாகும். ''தொல்காப்பிய களவியல் நோக்கில் தலைவியின் மாண்புகள்'' என்ற இக்கட்டுரையில் தொல்காப்பியம், நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகையில் குறியிடம் கூறுதல், குறியிடம் தலைவி சுட்டியது, பகற்குறி, பகற்குறி இடையீடு, குறியிடம் பற்றிய நினைவு, தலைவன் பிரிவால் வருந்துதல், தலைவி கலங்கியது போன்றவை கொடுக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரை முடிவில் முடிவுரை கொடுக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்**

களவு – குறியிடம் – பகற்புணர் – நீழல் – புணரி – பாங்கன் – அணங்கு – ஆரல்மீன் – புன்னைமலர் – சூளுறவு – ஏனல் – ஓம்பல் – சுற்றம் – பகற்குறி.

## முன்னுரை

சங்க அகஇலக்கியம் பெண்மைக்குரிய அனைத்து அடையாளங்களையும் தன்னகத்தே பதிவு செய்துள்ளது. இல்வாழ்வு அகமெனக் கருதப்படுதற்குக் கருத்தாவது களவாகும். அகவாழ்வின் முதற் நிலை களவு, இரண்டாம் நிலை கற்பு ஆதலினால் களவு வழிபட்ட கற்பு சிறப்புடையது என்றெண்ணினர் பண்டைத் தமிழ் மக்கள். தலைவியின் இயல்புநிலைக் களவு வாழ்க்கையில்தான் அதிகம் காட்டப்படுகின்றது. வரைமுறையற்ற பாலுறவுப் பண்பாட்டிலிருந்து ஒருவனுக்கு ஒருத்தி எனும் நெறிப்படுத்தப்பட்ட கொள்கை சங்க காலத் தொடக்கத்திலேயே உருவாகியுள்ளதனை களவுக்காதல் மூலமாக அறியமுடிகின்றது. தொல்காப்பிய களவியல் நோக்கில் தலைவியின் மாண்புகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## **தொல்காப்பியத்தில்** களவியல்

களவு என்பதற்குக் களைதல் என்று பொருள் கொள்ளலாம். ''மாசினைக் களைதற்பொருட்டு மேற்கொள்ளும் ஒழுக்கம்'' (பேராசிரியர்.சி.இலக்குவனார் -1961) என்று கூறியுள்ளார். தொல்காப்பியர் களவியலில் 51 நூற்பாக்களை வகுத்துள்ளார். திருமணத்திற்குரிய பருவம் எய்திய ஆணும், பெண்ணும் தாமே எதிர்பட்டுக் காதலித்து மணந்து கொண்டனர். இவ்வாறு எதிர்பட்டுக் காதலிப்பது அவரவர் விதியின் வழியே நிகழும் என்று தொல்காப்பியர்,

***“ஒன்றே வேறே என்றிருபால் வயின்***
***ஒன்றி யுயர்ந்த பால தாணையின்***
***ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப***
***மிக்கோ னாயினும் கடிவரை யின்றே” (தொல், பொருள் : 94)***
***(இளம்பூரணார்.சி. -1986)***
*எனும் நூற்பாவில் புலப்படுத்தியுள்ளார்.*

*தலைவியைக் குறித்துத் தொல்காப்பியர் பல இடங்களில் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.*
***“கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்***
***மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்***
***விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும் பிறவும்” (நற் : 154 )***
***(முனைவர்.ச.வே.சுப்பிரமணியன் -1998)***
*என்ற நூற்பாவின் மூலம் தலைவியின் பண்புகள் குறிப்பிடப் பெற்றுள்ளதைக் காணலாம்.*

***குறியிடம் கூறுதல்***

*தலைவி குறியிடம் குறித்தல் என்பது இலக்கண மரபாகும். குறியிடம் நேர்ந்ததை தோழி மூலமாகவும், பாங்கன் மூலமாகவும் தலைவனுக்கு அறிவிக்கிறாள். அவ்வாறின்றி அவளே நேரடியாகத் தலைவனுக்குக் குறியிடம் கூறுதல் நிகழ்வதை,*
***“பகற்புணர் களனே புறனென மொழிப***
***அவனறி வுணர வருவழி யான” (நற் : 130 )***
***(முனைவர்.ச.வே.சுப்பிரமணியன் -1998)***
*என்ற நூற்பாவில் தலைவி அறிந்தவிடத்தே குறியிடம் அமைதல் வேண்டும் என்று கூறுகிறது. அதற்கிணங்க தலைவி பசு மேய்த்தவிடத்திற்குத் தலைவனை வரச் சொல்கிறாள்.*

***குறியிடம் தலைவி சுட்டியது***

*தலைவி தலைவனை வழியில் கண்டு பேசிய பின் மறுநாள் தலைவனை சந்திப்பதற்கான குறியிடம் தலைவி சுட்டியதை,*
***“பாங்கு அரும் பாட்டங்கால் கன்றொடு செல்வேம்; எம்***
***தாம்பின் ஒருதலை பற்றினை, ஈங்கு எம்மை***
***கலத் தொடு யாம் செல்வுழி நாடி, புலத்தும்***
***வருவையால் -நாண்இலி! நீ” (கலி : 299 )***
***(முனைவர்.அ.விசுவநாதன் -2004)***
*தலைவி பசுக்களை மேய்க்கும் ஆயர் குலத்துப் பெண்ணாக இருக்கிறாள். அவளது குறியிடம் பசு மேய்த்த இடமாகும். தலைவி தலைவனுக்கு குறியிடம் கூறுவதை அறிய முடிகிறது.*

***பகற்குறி***

*கடற்கரைச் சோலையின் புன்னைமலர் வீழ்ந்துள்ள மணல்மேடு நிழல் பகற்குறிக்கு உரிய இடமாகச் சுட்டப்பட்டுள்ளதை,*
***“இதுமற்று எவனோ -தோழி! முதுநீர்ப்***
***புணரி திளைக்கும் புள்இமிழ் கானல்,***
***இணர்வீழ் புன்னை எக்கர் நீழல்,***
***புணற்குறி வாய்த்த ஞான்றைக் கொண்கற்rt***
***கண்டனமன், எம்கண்ணே; அவன் சொல்***
***கேட்டனமன் எம்செவியே; மற்று -அவன்***
***மணப்பின் மான்நலம் எய்தி,***
***தணப்பின் ஞெகிழ்ப, எம்தடமென் தோளே?” (குறுந் : 232 )***
***(முனைவர்.வி.நாகராசன் -2004)***
*என்ற பாடலில் கடலின் அலைகள் தழுவுகின்ற, பறவைகள் ஒலிக்கும் கடற்கரைச் சோலையில் கொத்துக்களாய்ப் பூத்துள்ள புன்னையின் மலர்கள் வீழ்ந்து காணப்படும் மணல்மேட்டில் புணர்வதற்குரிய குறி வாய்க்கப்பெற்ற காலத்தில் தலைவியின் கண்கள் தலைவனைப் பார்த்தன. செவிகள் தலைவன் உரைத்த மொழிகளை கேட்டன. காட்சிப் கலப்பினால் கண்களும், கேள்விப்*

*கலப்பினால் செவிகளும் நலம் பெற்றன. பார்த்தலும், கேட்டலும் இல்லாத தோள்கள் மெலிவுறுதல் வியப்பாக உள்ளது என்று தலைவி தோழியிடம் கூறுவதைக் காணமுடிகிறது.*

***பகற்குறி இடையீடு***

*தலைவன் இருகுறியிடத்தும் வந்து செல்லுதல் தடைப்பட்டது. தலைவனைக் காணுதல் வேண்டும் என்ற வேட்கை மிகுந்த தலைவி.*

***"கொடுங் குரற் குறைத்த செவ் வாய்ப் பைங்கிளி!***
***அஞ்சல் ஓம்பி, ஆர் பதம் கொண்டு,***
***கானக் குறவர் மட மகள்***
***ஏனல் காவல் ஆயினள் எனவே" (நற் : 102 )***
***(முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன் -2004)***

*தலைவன் வந்து திருமணம் செய்து கொள்ளாமையால் மீண்டும் தினைப்புனம் காக்க நேர்ந்தது என்னும் குறிப்புத் தோன்றக் கிளியிடம் தன் குறை கூற தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி தன்னைக் காண வருமாறு பறவைகளிடம் தூது சொல்வதையும், தோழி, பாங்கன் ஆகியோர் தவிர பிறவற்றின் மூலமாகவும் தூது சொல்லும்போது தலைவியின் பிரிவுத் துயர் அளவுகடந்து காணப்படுகிறது என்பதையும் அறிய முடிகிறது.*

***குறியிடம் பற்றிய நினைவு***

*குறியிடத்தில் நினைவு அகலாத தலைவியின் தன்மையை,*

***"நாள் மழை தலைஇய நல் நெடுங் குன்றத்து***
***மால் கடல் திரையில் இழிதரும் அருவி***
***தீம் தொடை நரம்பின் இமிரும்***
***வான் தோய் வெற்பன் மார்பு அணங்கு எனவே" (நற் :17 )***
***(முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன் -2004)***

*பகற்குறியில் வந்து சென்ற தலைவனின் பிரிவினால் வருத்தமுற்று இருந்த தலைவி, ஒருநாள் தலைவன் வந்து சிறைப்புறத்தானாக நிற்க தலைவன் கேட்குமாறு தோழியிடம் நானும் எனது தாயும் அருவி இறங்கும் மலைப்பாதையில் நடந்து சென்ற போது தலைவனுடன் நான் இருந்து இன்பம் நுகர்ந்த இடத்திற்கு வந்ததும் என்னையும் அறியாமல் கண்கள் கலங்கின. அதைக் கண்ட என் தாய் என்னைத் தேற்றும் விதமாக என்ன காரணத்திற்காக அழுகிறாய் எனக் கேட்டாள். நான் இம்மலையிடத்தே தலைவனது பிரிவினால் இவ்விடம் வந்ததும் அந்நினைவு கருதி கண்கள் நீர் சொரிகின்றன என்று சொல்ல வாயெடுத்தேன். ஆனால் சுய நினைவு ஏற்பட நிறுத்திக் கொண்டேன் என்று தலைவி தோழியிடம் கூறுவதை அறிய முடிகிறது.*

***தலைவன் பிரிவால் வருந்துதல்***

*குறியிடத்து இன்பம் நுகர்ந்த தலைவி தலைவனின் பிரிவால் வருந்துவதுண்டு. குறியிடத்து மீளும் தலைவனது பிரிவை ஆற்றாதவளாய் தலைவி தன் நெஞ்சிற்குக் கூறியதை,*

***"தேரும் செல் புறம் மறையும்; ஊரொடு***
***யாங்கு ஆவதுகொல் தானே -தேம் பட***
***ஊது வண்டு இமிரும் கோதை மார்பின்,***
***மின் இவர் கொடும் பூண், கொண்கனொடு***
***இன் நகை மேவி, நாம் ஆடிய பொழிலே" (நற் : 187 )***
***(முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன் -2004)***

*இப்பாடலில் உடம்பின்கண் மிக்குத் தோன்றிய காம உணர்வு, அக்காம உணர்வைத் தணிக்கும் வகையறியாது பின்னே நின்று தொழுது நீங்குமாறு மாலைப் பொழுதும் மறைந்தது. மணிகள் பலவும் ஒலிப்பக் குதிரைகள் பூட்டப்பட்ட தலைவனின் தேரும் கண்ணில் படாதவாறு தான் செல்லுகின்ற புறப்பகுதியும் தெரியாதவாறு மறையும். ஆதலால் இந்த ஊரும், தேனை விரும்பி மலர்களிற் படுகின்ற வண்டுகள் ஒலிக்கும். இனிய மகிழ்ச்சி பெருக விளையாடிய சோலையும், இனி எப்படி காணப்படுமோ என்ற ஏக்கத்துடன் தலைவி தனக்குள்ளே சொல்லிக் கொள்வதை அறிய முடிகிறது.*

**தலைவி கலங்கியது**

*தலைவி தோழியை நோக்கி தலைவன் என்னைக் களவுப் புணர்ச்சியில் கூடிய பொழுது அவ்விடத்தில் சாட்சியாகக் கூடியவர் ஒருவரும் இல்லை. அது நிகழ்ந்த களத்தில் (இடத்தில்) இருந்தவர் தலைவன் ஒருவரே என்பதை,*

***"யாரும் இல்லைத் தானே கள்வன்***
***தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ" (குறுந் : 25 )***
***(முனைவர்.வி.நாகராசன் -2004)***

*ஓடை நீரில் ஆரல்மீன் வருகிறதா என்று கூர்ந்துப் பார்த்துக் கொண்டிருந்த தினைத்தாள் போன்ற சிறிய கால்களுடைய கொக்கு மட்டும் அவ்விடத்தில் சாட்சிக்குப் பயன்படாத நாரை கூட தன் உணவின் பொருட்டு ஆரல் மீனை நோக்கிய வண்ணம் இருந்தது அது தலைவனுடைய சூளுறவினைக் கேட்டிராது நான் என்ன செய்வேன் எனத் தலைவி கலங்கி தோழியிடம் கூறுகிறாள். தலைவன் விரைவில் மணந்து கொள்வேன் என்ற உறுதிமொழியைப் பொய் ஆக்கிவிட்டால் என் நிலை என்னவாகும் எனக் கலக்கமடைந்து தனக்கு சாட்சி இல்லாத ஆதரவில்லாத நிலையை தலைவி தோழியிடம் கூறியதை அறிய முடிகிறது.*

**முடிவுரை**

*அகப்பொருள் நூல்களில் காணப்பெறும் தலைவி அழகும், அறிவும் சிறந்தவளாக காணப்படுகிறாள். தலைவி குறியிடம் குறித்தல் என்பது இலக்கண மரபாகும். குறியிடம் நேர்ந்ததை தோழி மூலமாகவும், பாங்கன் மூலமாகவும் தலைவனுக்கு அறிவிக்கிறாள். அவ்வாறின்றி தலைவி நேரடியாகத் தலைவனுக்குக் குறியிடம் கூறுதலும் நிகழ்கிறது. மேலும் தலைவி தலைவனின் பிரிவால் வருந்துகிறாள் என்பதை இக்கட்டுரை புலப்படுத்துகின்றன. தொல்காப்பிய களவியல் நோக்கில் தலைவியின் மாண்புகளை இவ்வாய்வில் அறிய முடிகிறது.*

**மேற்கோள்கள்**


1. *இளம்பூரணனார்- தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் பி.லிட், சென்னை -600108, ஒன்பதாம் பதிப்பு – 1986.*
2. *சி.இலக்குவனார் – தொல்காப்பிய ஆராய்ச்சி, வள்ளுவர் பதிப்பகம், 855 வடக்கு முதல் வீதி, புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, 1961.*
3. *முனைவர்.கு.வெ.பாலசுப்பிரமணியன் – நற்றிணை, பாவை பிரிண்டர்ஸ் (பி)லிட், 16 -142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை -14, முதற்பதிப்பு -2004.*
4. *முனைவர்.வி.நாகராசன் – குறுந்தொகை, பாவை பிரிண்டர்ஸ் (பி)லிட், 16-142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை -14, முதற்பதிப்பு -2004.*
5. *முனைவர்.ச.வே.சுப்பிரமணியன்- தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், 31 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை -600108, முதற்பதிப்பு -1998.*
6. *முனைவர்.அ.விசுவநாதன்- கலித்தொகை, பாவை பிரிண்டர்ஸ் (பி)லிட், 16-142 ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை -14, முதற்பதிப்பு -2004.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********